பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 20 (2—4—68) செவ்வாய் ★ வெளியூர்: பங்குனி 21 (3—4—68) புதன் [இதழ்: 242

பாதுகாப்புத் துறையில் ஊதாரிச் செலவு

மக்களவையில் கம்யூனிஸ்டு உறுப்பினர் கண்டனம்

புதுடில்லி, ஏப். 4—

"பாதுகாப்புத் துறையினரின் கவைக்குதவா காரியங்களையும், ஊதாரிச் செலவுகளையும் எதிர்த்து நீண்ட போராட்டம் நடத்த வேண்டும்"

என்று மக்களவையில், வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. இந்திரஜித் குப்தா வற்புறுத்தினர்.

பாதுகாப்புத் துறை மான்யக் கோரிக்கைமீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றுகையில், பாதுகாப்புத் துறையில் வீண் செலவுகளைத் தவிர்க்கவும், கண்காணிக்கவும், நாடாளுமன்ற உறுப்பினர்களடங்கிய நிலைக் குழு ஒன்றை ஏற்படுத்தலாம் என்றும் யோசனை தெரிவித்தார்.

['பாதுகாப்புத் துறையின் வீண் செலவுகளைக் குறைக்க வேண்டும்' என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஏற்கனவே கருத்தறிவித்திருப்பது நினைவுகூரத்தக்கது.]

திரையரங்குகள் அரசுடைமையாகும்?

பஞ்சாப் மாநில அரசு நடவடிக்கை

சண்டிகார், ஏப் 1—

திரைப்படக் காட்சி அரங்குகளை, அரசுடைமையாக்கும் கொள்கையைப் பஞ்சாப் மாநில அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறதாம்.

இச்தகவலை முதலமைச்சர் திரு. இலட்சுமண சிங் கில் அறிவித்துள்ளார்.

திரையரங்குகளை அரசு மேற்கொள்வதன் மூலம் ஆண்டுச்கு ரூ. 2 கோடி கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த மாநிலத்தில் சுமார் 130 திரைப்படக் காட்சி அரங்குகள் உள்ளன[illegible]

துவக்கப் பள்ளிகள்

அதிகாரப்பூர்வ அறிவிப்பு

சென்னை, ஏப். 1—

"ஏட்ரல் 14-ம் நாள்வரையில் எல்லாப் பள்ளிகளையும் மூடுவதென்ற அரசின் முடிவு, துவக்கப்பள்ளிகளுக்கும் பொருந்தும்"

என, அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிவசேனைக்கு முதலாளிகள் பணவுதவி!

'துரதிருஷ்டவசமான' நிலை என்கிறார் சவாண்!

நடவடிக்கை எடுத்து வருகிறதாம் அரசு

புதுடில்லி, ஏப். 1—

"'சிவசேனு', 'லட்சித் சேனு' போன்ற வட்டார உணர்ச்சி கொண்ட இயக்கங்களை, உடனடிப் பலன் காண விரும்பும் அரசியல் கட்சிகள் பயன்படுத்திக்கொள்கின்றன"

என்று உள்துறை அமைச்சர் திரு. சவாண், இன்று நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கூறினர்.

"பம்பாயில் உள்ள சில முதலாளிகள், சிவசேனைக்குப் பணவுதவி செய்துவருகின்றன" என்று அவர் தெரிவித்தார்.

"இது, மிகவும் துரதிருஷ்டவசமான நிலைமையாகும்; இந்த நிலைமையையும், அதன் வளர்ச்சியையும் அரசு அறிந்துதான் வைத்திருக்கிறது. இதனைச் சமாளிக்க அரசு தக்க நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது" என்ருர் அவர்.

இந்தியப்படை வலிமை

"தற்போது இந்தியாவின் காலாட் படையின் அளவு 8,25,000-ஆக உள்ளது. இந்த எண்ணிக்கையை உயர்த்தாமலே சுடும் ஆற்றலையும், தாக்கும் வலிமையையும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; அதாவது 57 : 43-லிருந்து 62 : 38 விகிதத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது"

என்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. சுவரண் சிங், மக்களவையில் தெரிவித்தார்.

இந்திச் சொற்களுடன் என். சி. சி. நீடிக்க முடியாது

மத்திய அமைச்சர் சுவரண்சிங்குக்கு கந்தப்பன் நிலைமை விளக்கம்

புதுடில்லி, ஏப். 1—

நாடாளுமன்ற மக்களவையில், தேசீய மாணவர் படை (என். சி.சி.)யின் கட்டளைச் சொற்கள் பற்றிப் பாதுகாப்புத்துறை அமைச்சர் சுவரண் சிங் குறிப்பிடுகையில், 'என். சி. சி. போன்ற தேசீய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் மொழிப் பிரச்சினையைத் தொடர்புபடுத்த வேண்டாம்' என்ருர்.

இதுபற்றித் தமிழக முதலமைச்சருடன் தாம் தொடர்புகொண்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

இராணுவப் படையில் பயன்படுத்தும் கட்டளைச் சொற்களைத் தான், என். சி. சி. படையிலும் பயன்படுத்தி வருவதாகவும், நீண்ட காலமாகவே இது புழக்கத்தில் இருந்துவருவதாகவும் அவர் மேலும் கூறினர்.

இந்தச் சமயத்தில் கழக உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் குறுக்கிட்டு, 'என்.சி.சி. கட்டளைச் சொற்கள் தமிழிலோ ஆங்கிலத்திலோ இருக்கவேண்டும்' என்று தமிழக அரசு கோரவில்லை என்றும், இப்பொழுது அங்கு எழுந்துள்ள நிலைமையில், நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களுடன் அந்தப் படை அங்கே நீடித்திருக்க முடியாது என்றுதான் தெரிவித்திருப்பதாகவும் கூறினர்.

தமிழகத்திற்கு இல்லை!

பெட்ரோலியத் தொழிற்சாலை பற்றி மத்திய அமைச்சர்

புதுடில்லி, ஏப். 1

"தமிழ்நாட்டில் பெட்ரோலிய -- இரசாயனத் தொழிற்சாலை ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று, பெட்ரோலிய -- இரசாயனத்துறை அமைச்சர் திரு. அசோக் மேத்தா கூறினர்.

"கேரளத்தில் பெட்ரோலிய – இரசாயனப் பொருள் தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதி எதுவும் தரப்படவில்லை; ஆகையால், அதைத் தமிழகத்துக்குக் கொண்டுபோகும் கேள்விக்கே இடமில்லை"

என்று அசோக் மேத்தா, மக்களவையில் கூறினர்.

கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"ஒவ்வொரு பெட்ரோலிய-இரசாயனப் பொருள் தொழிற்சாலைக்கும் சுமார் ரூ. 200 கோடி அளவுக்குப் பெரும் முதலீட்டுத் தொகை வேண்டியிருக்கிறது. அதனுல், ஒன்று அல்லது இரண்டு தொழிற்சாலைகளைத் தான் ஏற்படுத்த இயலும். நாளடைவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சில பெட்ரோலிய – இரசாயனப் பொருள் தொழில்கள் ஏற்படக்கூடும்."

கச்சத் தீவு பிரச்சினை

அரசு ஆராய்வதாக இந்திரா தகவல்

புதுடில்லி, ஏப். 1—

"கச்சத் தீவு உரிமைத் தொடர்பாக இராமநாதபுரம் அரசர் அனுப்பிய சான்றேடுகள் உட்பட எல்லா விவரங்களையும் அரசு பரிசீலனை செய்து வருகிறது"

என, தலைமையமைச்சர் இந்திரா காந்தி மக்களவையில் தெரிவித்தார்.

"இதுசம்பந்தமாகத் தலைமையமைச்சரும், வெளிவிவகாரத் துணையமைச்சரும் முந்திய இரு சந்தர்ப்பங்களில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தவருன தகவல்களைக் கொடுத்தனர்" என மது லிமாயி (ச. சோ.) குற்றஞ்சாட்டினர்.

சபை நடவடிக்கைக் குறிப்பைப் படித்துக் காட்டி, 'இந்தப் புகார் ஆதாரமற்றது' என்ருர் தலைமையமைச்சர்.

இந்தி வெறியரின் பதவி விலகல்!

பஞ்சாப் அமைச்சரவைக்குப் புதிய தலைவலி!

புதுடில்லி, ஏப். 1—

காங்கிரசு ஆதரவு பெற்று இயங்கிவரும் பஞ்சாப் அமைச்சரவையிலிருந்து தொழிலமைச்சரான பிஷாம்பர்நாத் மக்கர் என்பவர் விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

திரு. மக்கர் கொடுத்துள்ள பதவி விலகல் மடலில், அவர் ஓர் இந்தி வெறியர் என்பது புலனுகிறது.

முதலமைச்சரின் இந்தி எதிர்ப்புக் கொள்கைக்கு எதிராகவே தாம் விலகிக் கொள்வதாக அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்; தேசீய மொழியான இந்தியை முதலமைச்சர் நசுக்கிவருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பஞ்சாப் மாநில மொழிச் சட்டத்தின்படி, பஞ்சாபில் இந்திதான் பயன்படுத்தப்படவேண்டும் என்றும், இந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்தி மொழியைப் பரப்பவும், வளர்க்கவும், பயன்படுத்தவும் முதலமைச்சர் இலட்சுமண சிங் கில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், முதலமைச்சர் சர்வாதிகாரியாக நடந்து கொள்வதாகவும், சட்ட விதிகளை மதிக்கவில்லை என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போது முதலமைச்சர் டில்லியில் இருக்கிருர்; இந்தச் சமயத்தில் திரு. மக்கர், தமது பதவி விலகல்பற்றி அறிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு ஆளுங் கட்சியாகவிருந்த ஐக்கிய முன்னணியிலிருந்து திரு. இலட்சுமண சிங் கில்லுடனும், மற்றும் 15-பேர்களுடனும் வெளியேறியவர் ஆவார் திரு. மக்கர்.

ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்து காங்கிரசு ஆதரவுடன், 'ஜனதா கட்சி' என்ற பெயரில் புதிய ஆளுங் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவர் இவர்.

ஒரிசா முதல்வர் வீட்டு முன் உண்ணுநோன்பு

மதுவிலக்கு ஒழிப்புக்கு எதிர்ப்பு

புவனேசுவரம், ஏப். 1—

மதுவிலக்கை ஒழித்துவிட ஒரிசா மாநில அரசு முடிவு செய்திருப்பதை எதிர்த்து, இரண்டு சட்டமன்ற உறுப்பினர் உட்பட 5 காங்கிரசுக்காரர்கள், முதலமைச்சரின் இல்லத்தின்முன் உண்ணுநோன்பு இருக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தியை எதிர்க்கக் குழு அமைப்பு

ஆங்கிலத்தை நீடிக்கவும் மலையாளத்தைப் பயிற்சி மொழியாக்கவும் வற்புறுத்தல்

கேரள இந்தி எதிர்ப்பு மாநாட்டு முடிவு

"இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தியைத் திணிக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது" எனக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றைக் கேரள இந்தி எதிர்ப்பு மாநாடு நிறைவேற்றியது.

இரண்டு நாள் மாநாடு நேற்றிரவு இங்கு முடிவடைந்தது.

'கேரள இந்தித் திணிப்பு எதிர்ப்புக் குழு' என்ற பெயரில் ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலத்தை நீடிக்குமாறு மத்திய அரசை, மாநாடு வற்புறுத்தியது.

உயர்நிலைப் பள்ளிகளில் மலையாளத்தைப் பயிற்றுமொழியாகவும், கல்லூரிகளில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகவும் செயல்படுத்துமாறு கேரள அரசை மற்றொரு தீர்மானம் மூலம் மாநாடு கேட்டுக்கொண்டது.

பம்பாயில் போலீசு அட்டூழியம்

தென்னிந்தியர்கள் திக்கற்றவர்களாக ஆக்கப்படும் கொடுமை

தென் மாநில முதலமைச்சர்களுக்குத் தந்தி மூலம் முறையீடு

இங்கு அண்மையில் நடந்து முடிந்த மாநகராட்சி மன்றத் தேர்தலையடுத்து 'சிவசேனை'யைச் சேர்ந்தவர்கள், தென்னிந்தியர்களின் இருப்பிடங்களையும் தாக்கத் திட்டமிட்டு கலகம் விளைவித்தனர்.

இதை ஒரு சாக்காக வைத்து, எண்ணற்ற போலீசுப் படைகள் தாராவியில் வந்து குவிந்து, நிரபராதிகளான தென்னிந்தியர்களை (பெண்களையும் பச்சிளங் குழந்தைகளையும்கூட) கண்மூடித்தனமாகத் தாக்கிப் படுகாயப்படுத்தியதுடன், சுமார் 300-க்கு மேற்பட்ட தென்னிந்தியர்களைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தி வருகின்றனர். துணிந்து போலீசில் போய்ப் புகார் செய்பவர்களையே போலீசார் செம்மையாக அடித்து கைதும் செய்கின்றனர்.

போலீசாரின் நடவடிக்கைகள், தென்னிந்தியர்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செய்யும் தாக்குதல் என்பதையும் மிகத் தெளிவாக உணரமுடிகிறது.

உயிருக்கும் உடைமைக்கும் யாதொரு பாதுகாப்புமின்றி பரதவிக்கும் தென்னிந்தியர்களைப் பாதுகாக்க மராத்திய மாநில அரசு முன்வருவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

தென்னிந்திய மக்கள் அகதிகளாக்கப்பட்டுப் புகலிடம் தேடி அலைகின்றனர்.

தென்னிந்தியத் தொழிலாளர்கள் தத்தம் தொழிற்சாலைகளுக்குப் போக முடியாது வேலை இழக்கும் நிலையிலிருந்து கண்கலங்குகின்றனர்.

தாராவியின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மத்திய அரசுத் தலைவர்களுக்கும், மற்றும் தமிழகம்—கருநாடகம்—கேரளம்—ஆந்திரம் போன்ற மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் அவசரத் தந்தி அனுப்பி, அவர்களுடைய தலையீட்டுக்கான முயற்சி செய்துவருகின்றனர்.

மூட்டைப்பூச்சிக்காக வீட்டைக் கொளுத்திய கதை

கருநாடக மாநிலத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் தத்தம் உரிமைக்காகக் கிளர்ந்தெழுவதை ஒடுக்குவதற்காக, மைசூர் மாநில அரசு,

"ஆசிரியர்கள், அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக, சட்ட மன்ற மேலவையிலுள்ள ஆசிரியர் தொகுதியையே நீக்கிவிட வேண்டும்"

என்று மத்திய அரசிற்குப் பரிந்துரைக்கத் தீர்மானித்திருக்கிறது.

சிறந்த திரைப் படங்களுக்குப் பரிசு

போட்டியில் கலந்துகொள்வோர் கவனிக்க:

சென்னை, ஏப். 1—

தமிழ்த் திரைப் படங்களின் தரத்தை மேலும் உயர்த்தவும், தயாரிப்பாளர்களுக்கு ஊக்கமளிக்கவும் ஆண்டுதோறும் சிறந்த தமிழ்ப் படங்களுக்குப் பரிசளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.

தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட படங்கள் நீங்கலாக, நடைமுறை ஆண்டில் தயாரிக்கப்பட்டு மத்திய தணிக்கைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற எல்லாத் தமிழ்ப் படங்களும் இந்தப் பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

அந்த ஆண்டின் முதலாவது சிறந்த தமிழ்ப் படத்துக்கு ரூ. 50,000; இரண்டாவது சிறந்த தமிழ்ப் படத்துக்கு ரூ. 25,000; மூன்றாவது சிறந்த தமிழ்ப் படத்துக்கு ரூ. 15,000; மற்றும் சிறந்த இயக்குநர்—சிறந்த கதாசிரியர்—சிறந்த நடிகர்—சிறந்த நடிகை ஒவ்வொருவருக்கும் ரூ 5,000 பரிசாகச் சிறு சேமிப்புப் பத்திர வடிவில் வழங்கப்படும்.

பரிசுக்குரிய படங்கள், இயக்குநர், கதாசிரியர், நடிக—நடிகையரைப் பற்றி இதற்கென அமைக்கப்பட்டுள்ள ஆய்வுரைக் குழு அரசுக்குச் சிபாரிசு செய்யும்.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்கென உள்ள விண்ணப்ப பாரத்தில் விண்ணப்பிக்கும் பொழுது ரூ. 100 நுழைவுக் கட்டணமாக உடன் அனுப்பவேண்டும். இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

'ஆங்கில ஒழிப்பு வேடம்' கலைகிறது!

மூன்று மாதங்களுக்கு முன்பு, ஐதராபாத் நகரில், அனைத்திந்தியக் கல்லூரி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி ஒன்று நடந்தது; இந்தியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும் கல்லூரி மாணவர்கள், அதில் பங்கெடுத்துக்கொள்ள வந்திருந்தனர்.

மாணவர்கள், மார்பின்மீது தத்தம் மாநிலங்களின் பெயர்களை அணிந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு மாநிலத்தவரும் தத்தம் பெயரைத் தாய்மொழியிலேயே—அதன் எழுத்திலேயே எழுதி வைத்துக்கொண்டிருந்தனர்.

குசராத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் பெயரை இந்தி எழுத்துக்களில் எழுதி வைத்துக்கொண்டிருந்தனர்.

அவ்வளவு மாணவர்களிலும், தமது மாநிலங்களின் பெயர்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதி அணிந்துகொண்டவர்களும் இருக்கத்தான் செய்தார்கள்!

அவர்கள் இந்திப் பிரதேசத்துக் கல்லூரி மாணவர்கள்தாம்!

சில நாட்களுக்குமுன் 'ஆங்கில ஒழிப்பு' என்ற பெயரால் நகரங்களைச் சூறையாடினூர்களே—அதே இந்தி மாநில மாணவர்கள்தாம் இவர்கள்!

—'தினமான்': 24—3—68

சாத்தூர் அணையிலிருந்து பாசன நீர்

இரண்டாம் போகத்திற்கு வசதி

சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின்கீழ், தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் அணைக்கட்டு ஏற்பாட்டின்கீழ் 7,100 ஏக்கருக்கு இரண்டாம் போகப் பயிருக்குப் பாசன வசதி கிடைக்கும்.

ஏப்ரல் 30-ம் நாள் வரையில், குளங்களுக்கு நீர் விடப்படும்.

இந்த நாளுக்குப் பிறகு, எக்காரணத்தை முன்னிட்டும் நீர் விடப்படமாட்டாது.

இரண்டாம் போகம் பயிரேற்ற அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி, தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியாளரால் தனியே அறிவிக்கப்படும்.

"இந்தத் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 5,000 ஏக்கருக்கு அதிகமாக மேலும் 2,100 ஏக்கருக்கு இந்த ஆண்டில் சிறப்பு முறையில் நீர் விடப்படுகிறது; எதிர்காலத்தில் இப்படிப் பாசனம் கோரி இதனை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்காட்ட இயலாது" என்று அரசுத்துறைச் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

ஒரு துடைப்பம் வாங்க ஓராண்டுக்காலம்!

"சிவப்பு நாடா முறை காரணமாக, அலுவல்கள் எப்படித் தாமதப்படுகின்றன என்பதை விளக்குவதற்காக மைசூர் அரசின் அதிகாரி ஒருவர் சுவையான நிகழ்ச்சி ஒன்றைக் கூறியிருக்கிறார்.

ஒரு தொழிற்சாலையில் கக்கூசைக் கழுவுவதற்காகத் துடைப்பம் ஒன்று தேவைப்பட்டதாம்!

இந்தத் தேவை, எழுத்தருக்கு அறிவிக்கப்பட்டதாம்; அவர், குறிப்பிட்ட பாரத்தை நிரப்பி, அதை மேலதிகாரிக்கு அறிவித்தாராம்; அதை அந்த அதிகாரி, போர்மெனுக்கு அனுப்ப—அவர், அதனைச் சூப்பரிண்டெண்டுக்கு அனுப்பி வைத்தாராம்! பிறகு அது, முறையே சாமான்கள் வாங்கும் அதிகாரிக்கும், பொருளாதாரத் துணையாளருக்கும், உதவி நிர்வாகிக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாம்!

இதற்குள் ஓராண்டுக் காலம் கழிந்து, துடைப்பம் தேவைப்பட்டவர்கள் வேறு ஏற்பாடுகள் செய்துகொண்டுவிட்டிருந்தார்களாம்!

புத்தொளி பெற்ற சிற்றூர்கள்!

சென்னை, ஏப் 1—

சனவரித் திங்களில் தமிழகத்தில், 190 நகரங்களும், சிற்றூர்களும் மின்வசதி பெற்றன: 4,590 பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றன.

பிப்ரவரி முதல் நாளன்று மின்வசதி பெற்றிருந்த நகரங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 27,862; மின்இணைப்புப்பெற்றிருந்த பம்பு செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 3,31,756.

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டோர்

வி. தங்கபாண்டியன்

ஜி. பராங்குசம்

'கைக்கூலி' கொடுக்க வீட்டை அடகுவைத்தவர்!

கட்சி மாறியவர்களுக்கு 'அடித்த யோகம்'!

அண்மையில் மேற்கு வங்காளத்தில் நடந்த கட்சி மாறும் நாடகத்தில் முக்கிய பங்கு வகித்த ஆசுதோஷ் கோஷ், உறுப்பினர்களின் விசுவாசத்தைக் கலைப்பதற்காக, பல இலட்சம் ரூபாய்களைச் செலவிட்டாராம்!

இதற்காக அவர், தமது மூன்று வீடுகளையும் அடமானம் வைக்கவேண்டியிருந்ததாம்! இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்!

'இம்பாலா'வில் ஏறிச் செல்லும் எளிமை 'உபதேசி'கள்!

இன்றைய கல்லூரி மாணவர்களின் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை அறிவதற்காக டில்லி 'தினமான்' ஏடு பல மாணவர்களைப் பேட்டி கண்டபோது, ஒரு மாணவர்,

"தினேஷ் சிங் போன்ற காங்கிரசு அமைச்சர்கள் வருகிறார்கள்; சுதேசி மனப்பான்மை ப[illegible]ங்களுக்கு உபதேசம் [illegible]கிறார்கள்; ஆடம்பரமான டெரிலின் சட்டைகளை அணியவேண்டாம் என்று எங்களுக்குச் சொல்கிறார்கள்! பிறகு, 'இம்பாலா'வில் (விலையுயர்ந்த அயல்நாட்டு ஊர்தியின் பெயர்) உட்கார்ந்துகொண்டு போய்விடுகிறார்கள்; இந்த 'ஹிபோகிரசி'தான்—போலித்தனம்தான்—இன்றைய உண்மை"

என்று கூறியிருக்கிறார்.

இன்னொரு மாணவர்,

"நாடாளுமன்றத்திற்குச் செல்லும் வழியான 'பார்லிமெண்டு ஸ்டிரீட்'டையே '144 வழி' என்று அழைக்கலாம் என்று தோன்றுகிறது; கடந்த 2½ ஆண்டுகளாக இந்தப் பகுதியில் இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது"

என்று கூறியிருக்கிறார்.

இப்படியும் சிலர்!

அண்மையில் தனது வாசகர்களின் பொது அறிவைக் கண்டறிவதற்காக, ஒரு பிரிட்டிஷ் ஏடு போட்டி நடத்தியபொழுது, வாசகர்கள் பல சுவையான பதங்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

ஐ. நா.-வின் செயலாளரான ஊ-தாண்டைப் பற்றி விடையிறுத்துள்ள பலர்,

"ஊ-தாண்ட் ஒரு தையற்காரர்; ஒரு நீர்மூழ்கிக் கப்பலின் பெயர்; சீனச் செங்காவலர் படையின் தலைவர்; இஸ்ரேலில் போரைத் தொடங்கியவர்"

என்றெல்லாம் அவர்கள் எழுதியிருக்கிறார்களாம்!

ஸ்டாலின் மகள் ஸ்வெட்லானாவைப் பற்றிக் கூறியுள்ள ஒருவர்,

"பீட்டில்ஸ் பாடகர்களோடு உள்ள சந்நியாசி"

என்று எழுதியிருக்கிறாராம்!

ஒரு நூற்றாண்டு புகழ்பெற்ற சின்கோனாத் துறை

நறுமணப் பொருள்களைத் தயாரிக்கும் அரசு வணிக நிறுவனம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தரும் விளக்கம்

"தமிழக சின்கோனாத் துறை கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழக அரசின் ஒரு வணிக நிறுவனமாக இயங்கிவருகிறது.

"நீலகிரி மாவட்டத்திலும், கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதிகளிலும் இந்தத் துறை சின்கோனா, பிற மூலிகைச் செடிகள், மணம் கமழ் செடிகள், தைலச் செடிகள் முதலியவற்றைப் பயிரிடுகிறது.

"கொயினா உற்பத்திக்காக ஆனைமலைப் பகுதியில் இத்துறையைச் சேர்ந்த தொழிற்சாலை ஒன்று இருக்கிறது.

"யூகலிப்ட்ஸ், ஜெரேனியம் போன்ற தைலங்களையும், மருந்து எண்ணெய்களையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு வேண்டிய அளவிற்குத் தூய்மையாக்கும் பணியில் நீலகிரியில் உள்ள தொழிற்சாலை ஈடுபட்டுள்ளது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், சட்டமன்றத்தில் அளித்த—தமிழக 'சின்கோனா' துறை பற்றிய குறிப்பொன்றில் தெரிவித்திருக்கிறார். அக்குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

வருவாயை உயர்த்த!

சின்கோனா பயிரிடுவதிலும், சின்கோனா மரப் பட்டையை பதனப்படுத்தி பல்வேறு கொய்னாப் பொருட்களைத் தயாரித்தலும், தயாரிக்கப்பட்ட பொருள்களை அயல்நாட்டிலும், நம் நாட்டிலும் விற்பனை செய்தலும் இத்துறையின் தலையாய பணிகளாகும்.

இதன் மூலம் வருவாயை உயர்த்தவும், குறிப்பிட்ட மருந்து—மற்றும் நறுமணப் பொருள் எண்ணெய்களுக்கு நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பெருமளவுத் தேவையை ஈடுசெய்யவும், இந்தத் துறை பலவகையான மருந்து மற்றும் மணங்கமழ்ச் செடிகளையும் பயிரிடுகின்றது. அவற்றைப் பதனப்படுத்தி உற்பத்தி செய்த பொருள்களை நேரிடையாகவும் விற்பனை செய்கின்றது.

மலேரியா மற்றும் சாதாரணக் காய்ச்சல்களைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுவது, 'கொயினா' என்பது நன்கு அறிந்ததே. 'சின்கோனா' மரப்பட்டையிலிருந்து இது கிடைக்கிறது.

தென் அமெரிக்காவில் உள்ள அதன் தாயகத்திலிருந்து இந்த மரம் 1859—60-ம் ஆண்டு இந்தியாவிற்கு முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டது.

தென்னிந்தியாவில், கடல் மட்டத்திற்கு மேல் 3,000 அடி உயரமுள்ள இடங்களில்தான் சின்கோனா மரம் நன்றாக வளருகிறது.

தேயிலை, காப்பி, ரப்பர் முதலியவற்றைப்போல் இதைப் பயிரிடுவதால் பெரும் ஆதாயம் கிட்டாததால், சின்கோனாப் பயிர் தனிப்பட்ட முதலாளிகளின் ஆர்வத்தைத் தூண்டவில்லை.

எனவே, இந்தியாவின் கொயினாத் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தமிழக அரசே இதனைப் பயிரிடும் பணியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இந்தியாவில் கொயினா தயாரிக்கும் மற்றொரு மாநிலம் மேற்கு வங்காளம் ஒன்றுதான்."

மூன்றில் ஒரு பகுதியினர் மகளிர்!

கருநாடக மாநிலத்தில், இந்த ஆண்டில் 1,96,625 மாணவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதப் போகிறார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள்.

இவர்களில் கன்னடத்தில் தேர்வு எழுதப் போகும் மாணவர்கள் 75 சதவீதத்தினர்; ஆங்கிலத்திலும் மற்ற தாய்மொழிகளிலும் தேர்வு எழுதப் போகிறவர்கள் முறையே 18, 7 சதவிகிதத்தினர்!

பற்றுக்குறையைச் சரிகட்ட பணநோட்டா அச்சடிப்பது?

தமிழக முதலமைச்சர் தந்த வரவு-செலவுத் திட்டம் பாரீர்

பிடிவாதத்தைத் தளர்த்திக் கொஞ்சம் பெருந்தன்மையைக் காட்டுக!

மொரார்ஜியின் முறையற்ற போக்கு -- மக்களவையில் சிட்டிபாபு இடித்துரை

"அண்மையில் தமிழக முதலமைச்சர் மின்னணுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 10 கோடி செலவில் அமைத்துக் கொடுக்கும்படி மத்திய அரசை வேண்டினர். அதன் மூலமாகத் தொழில் நுணுக்கம் தெரிந்த 3,500 தொழிலாளருக்கு வேலை தரமுடியும்.

"ருமேனிய அரசின் ஒத்துழைப்புடன் அமைக்க இருக்கும் கனரகத் தட்டுகள், பாத்திரங்கள் தொழிற்சாலையையும், இந்தியன் டெலிபோன் தொழிற்சாலையின் இரண்டாவது கிளையையும் தமிழகத்தில் நிறுவுமாறும் தமிழக முதலமைச்சர் வேண்டி இருக்கிறார்.

"தமிழகத்தில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், தமிழகம் தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் மத்திய அரசு இந்தத் திட்டங்களை உடனே செயல்படுத்தியாக வேண்டும்"

என்று நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர் சி. சிட்டிபாபு அவர்கள், மத்திய அரசின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் மத்திய அரசை வேண்டினர். அவர், பேச்சைத் துவங்குகையில் குறிப்பிட்டதாவது :—

உறுதிமொழியை ஏன் நிறைவே[illegible]இல்லை ?

"1968—69 ஆண்டுக்காக ரூ 315 கோடி பற்றுக்குறையான வரவு-செலவுத் திட்டத்தை அளித்தமைக்காக நான் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குழந்தைகளுக்குக்கூட வரி விதிப்பிலிருந்து விலக்குத் தரவில்லை.

திரு. மொரார்ஜி தேசாயும், டாக்டர் இராம் சுபாக் சிங்கும் கடைசியாக எப்போது அஞ்சலட்டையை உபயோகித்தார்கள்—அதுவும் சொந்தச் செலவில்—என்பது எனக்குத் தெரியவில்லை.

தாம் பதவியேற்றவுடனே, 6 காசுகளாக உள்ள அஞ்சலட்டையின் விலையை 5-காசுகளாகக் குறைக்கப் போவதாகச் சொன்னர்—டாக்டர் ராம் சுபாக் சிங்! அவருடைய உறுதிமொழியை மொரார்ஜி அவர்கள் இந்தத் திட்டத்தில் நிறைவேற்றவில்லை!

நாசிக் அச்சகத்தின் மூலம் நிலைமையை சீர்குலைப்பதா ?

வரி விதிப்பின் மூலம் ரூ. 60 கோடி பெற முடியும் என்று மதிப்பிட்டிருக்கிறார்—நிதியமைச்சர்; மீதித் தொகையை அவர் எப்படிச் சரிக்கட்டுவாரோ தெரியவில்லை!

ஏற்கனவே பலமுறை செய்த மாதிரி நாசிக்கில் இருந்து பணத்தை அச்சடிப்பாரோ என்னவோ! இதனுல் மாநில அரசுகளின் வரவு—செலவுத் திட்டங்கள் நிச்சயம் பாதிக்கப்படும்.

ஏராளமான பணத்தை அச்சடித்துப் புழங்க விடுவதாலே மாநில வரவு—செலவுத் திட்டங்கள் சிதைவுறும்—சின்னபின்னமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தேர்தல் நேரத்தில் தாம் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவு செய்யும் வகையிலும், பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஓர் உபரி வரவு—செலவுத் திட்டத்தைத் தமிழகத்துக்கு வகுத்தளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்துக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

பெரும்பாலான தென் மாநிலங்கள், உபரி வரவு—செலவுத் திட்டங்களையே வகுத்திருக்கின்றன என்பதையும் நிதியமைச்சருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆகவே, நடைமுறையில் மாநில வரவு—செலவுத் திட்டங்களை சிதைக்கும் முயற்சியே இந்த பட்ஜெட்!

அதுமட்டும் அன்று; ரிசர்வ் பாங்கிகளின்மீது தமக்கு இருக்கும் உரிமைப் பிடிப்பினல், மாநில அரசுகள் கடன் வாங்குவதையும் கட்டுப்படுத்தி மாநில அரசுகளைத் திக்குமுக்காடச் செய்திருக்கிறார்! நாசிக் அச்சகம் மொரார்ஜியின் கையில் இருப்பது அவருக்கு நல்வாய்ப்பாக இருக்கலாம். ஆனுல் நமக்கு அது துரதிர்ஷ்டமே!

இந்த நேரத்தில், தமிழக அரசு, ரிசர்வ் பாங்கியிடம் எத்தகைய கடன் எழுப்பும் முயற்சியிலும் ஈடுபடவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட அவாவுகிறேன்.

பொருளுமில்லை-- பொருத்தமுமன்று!

ஒரு நாட்டின் பொருளாதாரம் விவசாய அடிப்படையிலோ, தொழில் அடிப்படையிலோ, இரண்டின அடிப்படையிலுமோ அமையும். நம்மைப் பொறுத்த வரையில் விவசாயத்துறையில் பரிதாபத்துக்குரிய வகையில் நாம் தோல்வி கண்டிருக்கிறோம். இன்னமும் அமெரிக்காவிலிருந்து உணவு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்! இன்னம், எதிர்காலத்தில் நாம் சப்பாத்தியைக்கூட இறக்குமதி செய்யக்கூடும்! யார் அறிவர்!

'உணவுக் கையிருப்பை உயர்த்திக்கொள்வதற்காகவே இந்த இறக்குமதி' என்ற திரு. மொரார்ஜியின் வாதத்தில் பொருளுமில்லை—அது பொருத்தமும் ஆகாது.

தவருன அடிப்படையில் திட்டமிட்டதன் விளைவு

அதுதான் அப்படியென்றுல், தொழில் துறையிலும் நாம் பயங்கரமாகத் தோற்றிருக்கிறோம்! இங்கே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பெருமையும் இருக்கிறது—எஞ்சினீயர்கள் வேலை பின்றித் தவிக்கும் கேவலமும் இருக்கிறது!

இந்தத் தோல்விகளுக்கான ஒரே காரணம் தவருன அடிப்படையில் திட்டமிட்டதுதான்! திட்டங்களின் கால எல்லை 5 ஆண்டுக் காலமாக வரையறுக்கப்பட்டது; அதனுல் தவறுகளைத் திருத்திக் கொள்ள முனைவதற்குள் நெடுங்காலம் கடந்துவிட்டது!

இந்த 'ஐந்தாண்டுக் காலம் என்பதில் என்ன புனிதம் இருக்கிறது' என்பது எனக்குப் புரியவில்லை; ஏன் அவற்றை இரண்டாண்டுத் திட்டங்களாக மாற்றிக் கொள்ளக்கூடாது.

அது மட்டுங்கூடப் போதாது; இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் தரப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரங்கள் பொதுவாகவே பரவலாக்கப்படவேண்டும். இப்படி அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்று ஏற்கனவே மாநிலங்கள் கோருகின்றன.

விட்டுத் தரும் மனப்பான்மை வடவருக்கு ஏற்படுமா ?

தேசிய ஒருமைப்பாடு பற்றி நீள நெடுகப் பேசுகிறார்கள்; ஆனுல், தொழிற்சாலைகளை அமைக்கும் பிரச்சினையில் மாநிலத்துக்கு மாநிலம் ஏற்பட்டிருக்கிற ஏற்றத் தாழ்வு, இந்த மன்றத்தின் முதிய உறுப்பினரான நிதி அமைச்சருக்குத் தெரியாததல்ல! மிகமிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வடநாட்டில் நிறுவப்பட்டிருக்கின்றன; அதன் விளைவால் வடநாட்டுப் பகுதியில் வேலைவாய்ப்புப் பெருகியிருக்கிறது; வாழ்க்கைத் தரமும் உயர்ந்து இருக்கிறது.

இனியாவது தொழிற்சாலைகளைப் பரவலாக அமைப்பது பற்றி மத்திய அரசு ஏன் சிந்திக்கக் கூடாது ?

வடநாட்டில் உள்ள 'பொகாரோ' போன்ற ஒரு வெள்ளை யானையைக் கட்டித் தீனி போட்டுக் கொண்டிருப்பதைவிட, தென்னுட்டில்—சேலத்தில், ஹாஸ்பெட்டில், விசாகப்பட்டினத்தில் சிறிய எஃகுத் தொழிற்சாலைகளை அமைக்கலாமல்லவா? தென்னக மக்களைத் திருப்திப்படுத்தவும் இது உதவும். இதற்கு வடநாட்டில் உள்ளவர்களுக்குக் கொஞ்சம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வரவேண்டும்.

திணறுகின்ற நிலைமையை நிதியமைச்சர் உருவாக்குவது ?

மாநிலங்கள் மத்திய அரசிலிருந்து பெற்ற கடனுக்காக ஏராளமான தொகையை ஆண்டுதோறும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதன் விளைவாகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மாநில அரசுகள் திணறிக் கொண்டிருக்கின்றன! ஆகவே, மாநிலங்களுக்கு மத்திய அரசு பத்தாண்டுகளுக்கு முன்னே அளித்த கடன்களையெல்லாம் 'வஜா' செய்துவிட வேண்டுகிறேன். பிடிவாதத்துக்கே பேர்போன மொரார்ஜி, இந்தப் பிரச்சினையிலாவது கொஞ்சம் கரிசனத்தோடு நடந்துகொள்ளுவாரோ என்று சந்தேகப்படுகிறேன்.

தமிழக அரசின் பொருள் நிலையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கடன்வசூலிப்பைக் கொஞ்சகாலம் நிறுத்திவைக்க வேண்டுமென்ற தமிழக முதல்வரின் கோரிக்கையைக்கூட கருணையில்லாமல் நிராகரித்து விட்டாரே இவர்!

தமிழக அரசு நிறைவு செய்து காட்டும்!

இப்போது இந்த மன்றத்தில் நின்றுகொண்டு நான் உறுதி அளிக்கிறேன். நிதி அமைச்சர் தமிழக அரசின் வேளாண்மை வளர்ச்சிக்காக பத்துக் கோடி ரூபாய் பணம் தரட்டும்—பிறகு அண்டை மாநிலங்கள் அனைத்தின் உணவுத் தேவையையும் தமிழக அரசு நிறைவு செய்து காட்டும்!

தரவேண்டியதைத் தந்துவிடுவதே முறை!

இப்படி வரவேண்டிய வருவாயைச் சல்லி இல்லாமல் வசூலிப்பதில் அக்கறை காட்டுகிற நிதியமைச்சர் சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசு தரவேண்டிய தொகையையும் தந்துவிடுவதே முறை. பம்பாய், கல்கத்தா மாநகராட்சி மன்றங்களுக்கு இந்தப் பாக்கிகள் கொடுக்கப்பட்டு விட்டாலும், சென்னை மாநகராட்சிக்கு மட்டும் இன்னம் தரப்படவில்லை.

நான் சென்னை நகர மேயராக இருந்தபோது டில்லிக்கு வந்து வாதாடி இரண்டு இலட்சம் ரூபாய் மட்டுமே வாங்கிச்செல்ல முடிந்தது. 1954 முதல் 1967 முடிய வரவேண்டிய இந்தப் பாக்கி வசூலாகாதது குறித்து சென்னை மாநகராட்சி முழுதும் கொதித்துக் கிடக்கிறது.

'உயிர்மூச்சு'த் தொழில் ஏற்றம்காண உதவுவீர்!

கைத்தறித் தொழில் தென்னகத்தின் உயிர்மூச்சான தொழில். மத்திய அரசின் வரிக் கொள்கையால் கைத்தறித் துணி ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் துணி ஏற்றுமதி பாதிக்கப்பட்டதாலே கைத்தறி நெசவாளர்கள் வறுமைக்காளாகிவிட்டார்கள்!

எனவே, தனிப்பட்ட நெசவாளரும் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த ஏற்றுமதியை அதிகரிக்க ஊக்கமூட்டும் வகையில் மத்திய அரசு நடந்துகொள்ள வேண்டுகிறேன்.

கைத்தறித் துணிகளுக்கு உலக மார்க்கெட்டு ஏற்படுத்தித் தருவதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தவேண்டும்.

அறிகுறியே காணேம்!

என்னுடைய தொகுதியில் இருக்கிற கல்பாக்கம் அணு மின்நிலையத்துக்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் இல்லை. அங்கே பொறியியல் நிபுணர்கள், எழுத்தர்களாக இருக்கிறார்கள். கன இயந்திரங்களோ, அல்லது உலைகளோ வருவதற்கான அறிகுறிகள்கூடக் காணேம்!

அது மட்டுமல்ல; செங்கற்பட்டிலிருந்து சதுரங்கப்பட்டணம் வழியாகக் கல்பாக்கத்துக்கென்றே ஒரு இரயில் பாதை போட்டாக வேண்டும்.

மத்திய அரசு முன்வருமா ?

மாமபுல்லபுரம் — வேடந்தாங்கல் —புகழ் மிக்க காஞ்சிபுரம்— கழுகு வழிபாட்டுக்குப் பேர்போன திருக்கழுக்குன்றம்— ஆகிய உல்லாசப் பயணத் தலங்கள் நான்கை உள்ளடக்கிய தொகுதி என்னுடையது.

இந்த நான்கு இடங்களுக்கும், உலகத்தின் பல மூலைகளில் இருந்தெல்லாம் பயணிகள் வருகிறார்கள்; எனவே அவர்களின் நன்மைக்காக செங்கற்பட்டு—திருக்கழுக்குன்றம்—மகாபலிபுரம் — திருப்போரூர் — கேளம்பாக்கம்—தாம்பரம் பாதையில் சுற்று இருப்புப் பாதை (Circular Railway) போட மத்திய அரசு முன்வரவேண்டும்.

பலன் பெறுகின்றீர் -- உதவி என்ன செய்கிறீர் ?

உலகப் புகழ் பெற்ற காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் பற்றித் தலைமை அமைச்சர் நன்ருக அறிந்திருப்பார். இந்தப் பட்டுச் சேலைகளின் ஏற்றுமதியினுலே அந்நியச் செலாவணி பெறுகிற மத்திய அரசு, அந்தத் தொழில் வளர ஏதும் செய்யவில்லை!

காஞ்சிபுரத்தில் உள்ள பட்டு நெசவுத் தொழிலுக்கு மத்திய அரசின் உதவி வேண்டும். அவர்கள் தேவையை ஈடுகட்ட காஞ்சிபுரத்திலேயே ஒரு சரிகைத் தொழிற்சாலை வைத்தாக வேண்டும். இப்போது இந்தச் சரிகை வாங்குவதற்காக அவர்கள் நெடுந்தொலைவு செல்கிறார்கள்.

பயன் தரும் வகையில் திட்டம் தரக்கூடாதா?

என் தொகுதியில் ஓடும் பாலாற்றில் பாலுமில்லை—நீருமில்லை; வெறும் மணலாருய் இருக்கிறது.

இந்தப் பாலாற்றின் படுகையை ஆராய்ந்த வெளிநாட்டு நிபுணர்கள், ஆற்றின் அடியில் ஏராளமான நீர் உள்ளுக்குள் பாய்ந்து வீணுகக் கடலில் சென்று கலப்பதாய்க் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தும் வகையில் ஒரு திட்டம் செய்துதருமாறு மத்திய அரசை வேண்டுகிறேன்."

இரஷ்யாவில் 'இலக்கியம்' படும்பாடு!

"புஷ்கின் எழுதிய பெருங் காவியத்தின் நாயகன் முற்போக்குவாதியா—இல்லையா என்பதை நெட்டுரு செய்வதிலேயே இன்றைய இரஷ்ய மாணவனின் நேரமெல்லாம் கழிந்துவிடுகிறது. இலக்கியத்தை இப்படி 'முற்போக்கு' எண்ணங்களோடும், 'பிற்போக்கு' எண்ணங்களோடும் இணைந்து கற்பிப்பதைவிட, மாணவர்களுக்கு இலக்கியமே கற்பிக்காமல் இருந்துவிடுவது நல்லது"

என்று விளாடிமிர் தேந்திரியாகோப் என்ற இரஷ்ய எழுத்தாளர், 'லிடரெரி கெஜட்' என்ற இரஷ்ய வார ஏட்டில் எழுதியிருக்கிருர்.

சென்னை தீ விபத்து

துயர் துடைப்பு நிதி

சென்னை, மார்ச் 31—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, தமிழக முதலமைச்சர் திரட்டி வரும் நிதிக்கு மார்ச் 18-ம் நாள் வந்த தொகை ரூ. 3,766.21 ஆகும். இத்துடன் மொத்தம் ரூ. 36,09,379.39 சேர்ந்துள்ளது.

மேலவைத் தேர்தல்

ஏப். 8-ல் வாக்குப் பதிவு

சென்னை, ஏப். 2—

ஏப்ரல் 20-ல் தமிழகச் சட்டமன்ற மேலவையில் ஏற்படும் காலி இடங்களுக்காகப் பட்டதாரிகள்—ஆசிரியர்கள் — உள்ளாட்சி மன்றங்கள் தொகுதிகளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல், ஏப்ரல் 8-ஆம் நாள் திங்கட்கிழமை காலை 8-மணி முதல் மாலை 5-மணி வரையில் நடைபெறும்.

வாக்குப் பதிவு நடைபெறும் தொகுதிகளும் — தொகுதிகளின் வியாபகமும் (அடைப்புக் குறிக்குள்) வருமாறு :—

சென்னை கிழக்கு—மத்திய பட்டதாரிகள் தொகுதி (தஞ்சை—திருச்சி மாவட்டங்கள்).

சென்னை மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி (சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள்).

மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி (மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்கள்).

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி (சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம்).

தஞ்சாவூர்—உள்ளாட்சித் தொகுதி (தஞ்சாவூர் மாவட்டம்),

இராமநாதபுரம் உள்ளாட்சித் தொகுதி (இராமநாதபுரம் மாவட்டம்).

சேலம்—தர்மபுரி உள்ளாட்சித் தொகுதி (சேலம், தர்மபுரி மாவட்டங்கள்).

மறைவு

வேலாயுதம்பாளையம் தி. மு. க. துணைச்செயலாளர் வாங்கிலியப்பனின் ஆண் மகவு இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

மாணவர்--தொழிலாளர் மோதல்:

தனி நீதிபதியின் விசாரணை தொடங்கிவிட்டது

சாட்சியம் கூற விரும்புபவர்களுக்கு வசதி

சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

படிப்பைப் பாழாக்கிக் கொள்ளாதிருக்குமாறு மாணவர்களுக்கு அறிவுரை

சென்னை, ஏப். 1—

பேருந்துத் தொழிலாளர் – மாணவர் மோதலையொட்டி உத்தர விடப்பட்டிருக்கும் விசாரணை குறித்து, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருப்பதாவது:—

"வெளியூர்களுக்குச் சென்றுவிட்டிருக்கும் மாணவர்களில் யாராவது விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளிக்க விரும்பினுல்—அவர்கள் சாட்சியம் அளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்; அவர்களுக்குப் பயணப் படி தரப்படும்.

"மற்றும் யாராவது சாட்சியம் அளிக்க விரும்பினுல்—அவர்கள் எங்கேனும் பணியாற்றுபவர்களாக இருந்தால் — அவர்கள் சாட்சியமளிக்கும் நாளை, பணியாற்ற வந்த நாளாகக் கருதப்படும்.

"'வாரண்டு தேவைப்படாத' குற்றங்கள் சம்பந்தமாகப் புலன் விசாரணையும், சாட்சியங்கள் சேகரிக்கும் பணியும் ஏற்கனவே துவங்கப்பட்டுவிட்டன. ஒரு துணைக் கமிஷனரின் மேற்பார்வையில்—2 இன்ஸ்பெக்டர்களும், 2 சப்-இன்ஸ்பெக்டர்களும் அடங்கிய தனிக் குழு செயல்பட்டு வருகிறது.

"மார்ச் 25, 26-ம் நாட்களில், அனுமதியின்றி பஸ்களை எடுத்துச் சென்ற காரோட்டிகள் யார் என்பதைக் கண்டறிவதற்கு—போலீசு விசாரணையுடன் கூடவே இலாகா மூலமான விசாரணையும் நடைபெற்று வருகிறது.

"குழுவின் விசாரணைக்கு விடப்படும் பிரச்சினைகள், முந்தைய சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டவை போன்றே இருக்கும். ஏற்கனவே 'கெசட்'டில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. 'கமிஷனர்' (விசாரணை செய்யும் நீதிபதி) செயல்படத் தொடங்கிவிட்டார்.

"'நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஏதாவது கூற விரும்புபவர்கள் வந்து சாட்சியமளிக்கலாம்' என்று பொது மக்களைக் கேட்டுக்கொள்ளும் அறிவிப்பு ஒன்றை 'கமிஷனர் வெளியிடுவார்; அது, பத்திரிகைகளில் வெளியாகும்."

முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கைக்குப் பின், இது சம்பந்தமாகச் சில விளக்கங்களை எதிர்க்கட்சித் தலைவர் திரு. கே. இராசாராம் கோரினுர்; அதற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"விசாரணைக் குழுவிடம் ஏதாவது சொல்லக்கூடிய நிலைமையிலிருப்பவர்கள், குழுவுக்கு எழுதலாம்; அவர்களிடமிருந்து கடிதம் வந்த பின், குழுவுக்கு இயலக்கூடிய நாட்களில், சாட்சியமளிப்பதற்கு அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

"நடைபெற்றிருக்கும் சம்பவங்கள் கடுமையானவையாதலால், அவை சம்பந்தமாகத் தங்களுக்கு ஏதேனும் தெரிந்திருந்தால், விசாரணைக் குழுவின்முன்பு சாட்சியமளிப்பதற்கு முன்வருமாறு பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"சாட்சியமளிக்க முன்வரும் மாணவர்களுக்கு—சாட்சியமளிப்பதற்காக அவர்கள் நகரில் தங்கியிருக்கும் காலத்தில் 'ஹாஸ்டல்' வசதி செய்து தரப்படும்."

'மாணவர்கள், தங்கள் ஊர்களுக்குச் செல்லாமல் இங்கேயே விடுதி (ஹாஸ்டல்)களில் தங்கியிருக்கலாம்' என்ற யோசனைபற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"மாணவர்களுடன் நான் விவாதிக்கையில், தற்போதைய சூழ்நிலையில் அவர்கள், தங்கள் ஊர்களுக்குச் செல்வதுதான் நன்மையானதாகும் எனக் குறிப்பிட்டேன்; 'அதுதான் சிறந்தது' என்பதை மாணவர்களும் உணர்ந்துள்ளனர்.

"தேர்வுகளைப் பொறுத்தவரையில், அது, பல்கலைக் கழகம்–துணைவேந்தர் ஆகியோர் அதிகார வரம்புக்குட்பட்டதாகும்; கல்லூரி முதல்வர்களைக் கலந்தாலோசித்த பின், துணைவேந்தர், அறிவிப்பு வெளியிட்டிருக்கிருர்.

"தேர்வுகளைத் தள்ளிவைக்கும் பிரச்சினையில், துணைவேந்தர், 'சரியானதைத் தான் செய்வார்' என்பதை, நானே அவர்களிடம் கூறியிருக்கிறேன்.

"தற்போதைய சூழ்நிலையில் மாணவர்கள், தேர்வுக்குத் தங்களைத் தயாராக்கிக்கொள்வதற்காக விடுதிகளில் தங்கியிருப்பது விரும்பத்தக்கதன்று என்பதை, எனது சொந்த அனுபவத்திலிருந்தே சொல்ல இயலும்.

"மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதில் சந்தேகமே இல்லை; ஆனுல். அநாவசியமான விவாதங்களும், வாக்குவாதங்களும் ஏற்பட்டால், படிப்புப் பாதிக்கப்படலாம்; தொல்லைகளும் ஏற்படலாம். தேர்வுப் படிப்புக்காக மாணவர்கள், தங்கள் இல்லங்களுக்குச் செல்வதுதான் நன்மையானது."

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் முடிவு

முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப்பின், மாநில மருத்துவக் கல்லூரி மாணவர்களின் செயற்குழு, வேலைநிறுத்தத்தைத் 'தற்காலிகமாக' நிறுத்திவைத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

எங்கும் அமைதி நிலை

தமிழக அரசின் மருத்துவமனைகளின் அனைத்துப் பிரிவுகளும், வழக்கம்போல் செயல்படத் தொடங்கிவிட்டன. இளம் மருத்துவர்கள் அனைவரும் பணிக்குத் திரும்பிவிட்டனர்.

நகரப் பேருந்துகளும், நீண்ட தூரப் பேருந்துகளும் வழக்கம் போல் ஓடிக்கொண்டிருக்கின்றன

சம்பவங்களின்போது காயமடைந்த மாணவர்களும், பேருந்து ஊழியர்களும் குணமடைந்துவருகின்றனர்.

பல்கலைக் கழகத் தேர்வுகள்

துணைவேந்தர் தரும் தகவல்

சென்னை, ஏப். 1—

"சில பிரிவு மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத் தேர்வுகளை ஒத்திவைப்பதுபற்றி சிண்டிகேட் பரிசீலனை செய்து வருகிறது; இரண்டு அல்லது மூன்று நாட்களில் அறிவிப்பு வெளியாகும்"

என்று, துணைவேந்தர் ஏ. இலட்சுமணசாமி, மேலவையில் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

அமெரிக்க மக்களைத் திகைக்க வைத்த அறிவிப்பு!

அடுத்தத் தேர்தலில் நிற்கப்போவதில்லை என ஜான்சன் முடிவு

வியட்நாமில் குண்டுவீச்சு நிற்கும் --- அமைதி காண ஆவல்

நியூயார்க், ஏப். 1—

மீண்டும் தேர்தலில் தாம் போட்டியிட விரும்பவில்லை என்று நேற்றிரவு திடீரென அறிவித்ததன் மூலம் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன் அமெரிக்க மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.



வடக்குவியட்நாமில் குண்டு போடுவதை நிறுத்திவைக்க இருப்பதாக அறிவித்து அவர் டெலிவிஷனில் ஆற்றிய உரையின் இறுதியில் இத்தகவலை யாரும் எதிர்பாராத வகையில் வெளியிட்டார்.

வியட்நாமில் அமைதி ஏற்படுத்துவதற்குக் கடுமையாகப் பணியாற்றவிருப்பதாக அவர் அறிவித்தார்; தமது முடிவு மாற்ற முடியாதது என்றும் அவர் கூறினுர்.

"சனநாயகக் கட்சி வேட்பாளனுகப் போட்டியிட நான் விரும்பவில்லை; வேட்பாளனுக்கப்படுவதையும் ஏற்கப் போவதில்லை" என்று அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

பிளவு மனப்பான்மை பற்றியும் அதன் கடும் விளைவுகள் குறித்தும் எச்சரித்துவிட்டு அவர் மேலும் கூறியதாவது:—

"நமது மக்களிடையே ஐயப்பாட்டிலும், அவநம்பிக்கையிலும், தன்னலத்திலும், அரசியலிலும் ஒற்றுமையை இழக்கலாகாது!

இந்த அரசியல் பிணக்குகள் மிகுந்த ஆண்டில் தோன்றும் கட்சிப் பிளவுகளினுல், குடியரசுத் தலைவர் பதவி தொடர்புபடுத்தப்படுவதை நான் அனுமதிக்க முடியாது.

மிகத் தொலைவில் உள்ள போர்க்களத்தில் நமது அமெரிக்கக் குடிமக்கள் இருக்கிருர்கள்; உள்நாட்டில், நாட்டின் எதிர்காலத்துக்கு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது; அமைதிக்கான உலக நம்பிக்கைகள் ஊசலாடுகின்றன!

எனவே, பதவியின் முக்கியக் கடமைகளைத் தவிர, மற்ற கடமைகளுக்கு அல்லது சொந்த நலனுக்கு ஒருநாளையோ, ஒரு மணியையோ செலவிடக் கூடாது என நம்புகிறேன்.

மீண்டும் உங்கள் தலைவராக வருவதற்கு என் கட்சியின் வேட்பாளனுகப் போட்டியிட மாட்டேன்—இது உறுதி.

கௌரவமான அமைதிகாணவும், மதிப்பைக் காக்கவும், எந்த விலை கொடுக்கவும் எத்தகைய தியாகத்தைச் செய்யவும் வலிமை மிக்க—நம்பிக்கையுள்ள எச்சரிக்கையான அமெரிக்கா ஆயத்தமாக உள்ளது என்பதை எல்லோரும் அறியட்டும்.

வியட்நாம்

வியட்நாம் போரை முடிப்பது முன்னுரிமைப்பட்டியலின் முதற் பணியாகும். அங்கு அமைதி காணும் முயற்சியாக, வடவியட்நாமின் பெரும்பகுதிகள் மீது குண்டு வீசுவது உடனடியாக நிறுத்தப்படும்.

வடவியட்நாம் மக்களில் சுமார் 90 சதவிகித பேர் வசிக்கும் பகுதிகளில், குண்டு வீச்சு நிற்கும்.

நாம் காட்டிய நிதானத்துக்கு இணையாக வரனுப் நிதானம் காட்டினுல், எஞ்சிய சில இடங்கள்மீது குண்டு வீசுவதும் விரைவில் முடிவுறும்.

சமாதானப் பேச்சு விரைவில் துவங்கவேண்டும். பேச்சு மூலம் அமைதி காண நாம் தயார்."

[அடுத்த ஐந்து மாத காலத்தில் வியட்நாமுக்கு மேலும் 13,500 துருப்புக்களை அனுப்பப்போவதாகவும், ஜான்சன் அறிவித்தார். இத்துடன் வியட்நாமில் 55,00,000 அமெரிக்கத் துருப்புகள் இருக்கும்.]

****

தலைமைக் கழக அறிக்கை: 1/68

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1. 1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள் கீழ்க் கண்டவாறு உறுதி செய்யப்படுகின்றன:—

	அமைப்புகள்	நாட்கள்
		1968
(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள், சென்னை நகர வட்டக் கிளைகள்	மே 4, 5 சனி, ஞாயிறு
(ஆ)	நகர--பெருநகரக் கிளைகள்	மே 19 ஞாயிறு
(இ)	வட்டக் கிளைகள் (சென்னை நகரப் பகுதிக் கிளைகள்)	சூன் 2 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்	சூன் 23 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	சூலை 21 ஞாயிறு

2. 1965 மே திங்களுக்குப் பிறகு உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்தும், புதிய உறுப்பினராகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து முறைப்படி அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

3. தேர்தல் நடத்தும் முறைகள், கிளைகள்—உறுப்பினர்கள்—தேர்தல் ஆணையாளர்—வேட்பாளர் ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத் தாள் போன்ற விவரங்கள், தலைமைக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பிரதியும், திருத்தப்பட்ட புதிய சட்டத் திட்டப் பிரதியும் ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். தனிப்பட்ட முறையில் தேவைப்படுவோர் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்.

'அறிவகம்'
சென்னை-13.
22—3—'68

---அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.